# கடற்கரை கவியரங்கு – 636

**நாள்: 07-04.2024-**

## அறிந்தோர் விளம்பிடுவீரே!

மனம் தேடும் வினாக்களுக்கு மண்ணில் விடையுண்டோ?
தினந்தோறும் பலவடிவாய் திகழுமாம் வாழ்வியல்தான்!
கனப் பொழுதும் ஓய்வின்றி காததூரம் கடக்கின்றார்!

மனம்குளிரும் ஒருசமயம், மனம் வெதும்பும் சிலசமயம்!
தனதென்றும் எனதென்றும் தடுமாறி நிலைகுலைக்கும்!
இனியதே வாழ்வென்று இயம்பினோர் சிலருமுண்டு!

சினம்கொள்ளும் மனமிருக்கும் சிந்தையிலும் வளமிருக்கும்!
மனம் சூடும் கனவுகளில் மறு பிறப்பு உண்டென்பார்!
தினம் கொள்ளும் வாழ்வியலில் திகழும் பலகதைகள்!

நனிசீர் சொர்க்கம் என்பார், நரகமும் தான் என்பார்!
மனம்தேடும் வழியிலெல்லாம் செல்லல் ஆகாதென்பார்!
ஒவ்வொன்றாய் பலகதைகள் ஓயாமல் சொல்லிடுவார்!

சொன்னவர் நிலைத்ததில்லை கேட்டவரும் இருந்ததில்லை!
மண்மீதில் உயிர்யாவும் ஓர்நாளில் மரித்தலே நிலையாகும்!
பண்கூட்டி இசைத்தாலும் பரிதாபம் எனும் நிலையே!

விண்ணவரும் உண்டென்பார் விடையறிய கண்டவர்யார்?
மண்ணிலே உயிர்யாவும் ஒன்றினால் ஒன்று வாழும்!
மரணத்தின் நிலையிலுமே காலவரை இருப்பதில்லை!

மனிதரும் விலங்குமாய் உயிர்கள் மடிவதற்கே பிறப்பதேனோ?
மறுவின்றி நிகழ்தலையே ஊழ் என்றான் இளங்கோவுமே!
மறுபடியும் பிறந்தாரோ மரணத்தின் வழி அறிந்தாரோ?

மயக்கமின்றி உண்மை யிதனை அறியத்தருவீரோ?
மடிவதற்காய் பிறக்கின்ற உயிர்களின் நிலைதான்யாதோ?
மரித்தலும் உயிர்த்தலுமாய் மண்ணில் வாழ்வெதற்கு?

- **கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**

**07-04-2024 (காலை 10-45)**